**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர்.**

DVC **.No.1/2016**

**2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 29–ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா.2 –வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.பாலசுப்பிரமணியன் M.C. அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

ம.சா. : 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருப்பையா | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| சாதி | : | வயது | : |

**<u>29.11.2018</u>**

**<u>ம.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

மனுதாரர் வேம்புவின் அம்மா பெயர் கனகாம்பாள் ஆகும். கனகாம்பாளின் உடன்பிறந்த சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவருடைய சின்னம்மா மகளை நான் திருமணம் செய்துள்ளேன். முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ளதுபோல் மனுதாரர் எனக்கு கொழுந்தியாள் மகள் இல்லை என்று சொன்னால் சரிதான். ஒருவருடத்திற்கு முன்பு மனுதாரரின் வீட்டில் கும்பலாக இருந்தது என்று முதல்விசாரணைக்கான பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு யார் யார் அந்த கும்பலில் இருந்தார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மண்ணெண்ணையை மனுதாரர் ஊற்றிக்கொண்டு மருத்துவமனையில் சேர்த்தபோது நான் சென்றேன். அவர் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் 2,3 நாட்கள் இருந்தார். மண்ணெண்ணை ஊற்றிக் கொண்டதாக சொல்லும் சமயத்தில் போலீசார் விசாரித்தார்களா என்றால் மகளிர் காவல்நிலையத்தில் விசாரித்தார்கள். அதன்பேரில் எதிர்மனுதாரர் மீது ஏதேனும் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் உண்மைக்கு புறம்பாக வேம்புவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.